ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1986/30 - 2016 සැප්තැම්බර් මස 28 වැනි බදාදා - 2016.09.28

*1986/30 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*மேல் மாகாணத்தின் 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, நிதி (திருத்தப்பட்ட) நியதிச் சட்டம்*

*மேல் மாகாணத்தின் மாகாண சபையின் முதல் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவை, சட்டமும் சமாதானமும், உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், பொருளாதார ஊக்குவிப்பு, மின்சக்தி மற்றும் வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் திட்டமிடல் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை நடவடிக்கைகள் தொடர்பான அமைச்சர் எதிரிசிங்ஹ ஆரச்சிகே இசுற தேவப்பிரிய தர்மசேன பெரேரா ஆகிய நான், மேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, நிதி (திருத்தப்பட்ட) நியதிச் சட்டத்திற்காக மேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநரின் அனுமதி 2016.09.07 ஆந் திகதி கிடைக்கப்பெற்றுள்ளதனால் அந் நிதி நியதிச் சட்டம் 2016.09.07 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*எதிரிசிங்ஹ ஆரச்சிகே இசுற தேவப்பிரிய தர்மசேன பெரேரா,*
*மேல் மாகாணத்தின் மாகாண சபையின் முதல் அமைச்சரும் நிதி மற்றும்*
*திட்டமிடல் பொறியியல் சேவை, சட்டமும், சமாதானமும், உள்ளூராட்சி மற்றும்*
*மாகாண நிர்வாகம், பொருளாதார ஊக்குவிப்பு மின் சக்தி மற்றும் வலு, சுற்றாடல்*
*நடவடிக்கை, நீர் திட்டமிடல் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை நடவடிக்கை*
*தொடர்பான அமைச்சர்*
*மேல் மாகாணம்.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*சிராவஸ்தி மந்திரய,*
*கொழும்பு 07,*
*2016, செத்தெம்பர் 27.*

**மேல் மாகாணத்தின் 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, நிதி (திருத்த) நியதிச் சட்டம்**

*2014 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நியதிச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, மேல் மாகாண நிதி நியதிச் சட்டத்தினை திருத்தம் செய்வதற்கான நியதிச் சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண மாகாண சபையினால் இவ்வாறு நிறைவேற்றப்படுகின்றது :-*

*சுருக்கப்பெயர் மற்றும் அமுல் படுத்தப்படும் திகதி.*

*1. இந்நியதிச் சட்டம் மேல் மாகாணத்தின் 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, நிதி (திருத்த) நியதிச் சட்டம் என குறிப்பிடப்படுவதுடன், மேல் மாகாண ஆளுநரின் அனுமதி கிடைத்த திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படும்.*

*2. பிரதான நியதிச் சட்டத்தின் 102 (அ) பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக கீழே காட்டப்பட்டுள்ள பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது:-*

*வருமான ஊக்குவிப்பு நிதியம்.*

*102 (அ)* இப்பிரிவில் இதன் பின்னர் "நிதியம்" என குறிப்பிடப்பட்டுள்ள விடயம் வருமான ஊக்குவிப்பு நிதியம் என குறிப்பிடப்படும் நிதியம் ஒன்றாக ஸ்தாபிக்கப்படல் வேண்டும் ;

*(ஆ)* ஒவ்வொரு ஆண்டுக்காகவும் நிதியத்தின் பணிகளுக்காக மேல் மாகாண மாகாண சபையினால் வருடாந்தம் ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தில் பகிர்ந்தளிப்பு செய்யப்படும் ஏதாவது தொகை இந்நிதியத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

*ஊக்குவிப் புப்படி ஈட்டப்பட வேண்டிய முறை.*

*(இ)* (i) மாகாண வருமான ஆணையாளரினால் செயற்படுத்தப்படும் ஏதாவது நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எவராவது ஒருவரினால் செலுத்தப்பட வேண்டியுள்ள வரி/ கட்டணம் குறிப்பிட்ட காலத்தினுள் செலுத்தாமல் உள்ள போது வருமானம் சேகரிக்கப்பட்டுள்ள போது, மற்றும்/அல்லது மாகாண ஆணையாளரினால் செயற்படுத்தப்படும் ஏதாவது நியதிச் சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டியுள்ளது என அந்நியதிச் சட்டத்தின் ஊடாக பணிக்கப்பட்டுள்ள அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை மற்றும்/அல்லது ஏதாவது அறிக்கை ஒன்றில் வெளியிடப்பட்டுள்ள மொத்த திரும்பல் ஏதாவது ஆதனப் பத்திரம் ஒன்றில் அறிவிக்கப்பட்டுள்ள பெறுமதி நியதிச் சட்டத்தின் பிரிவுகளின் படி பரிசீலனை செய்யப்படும் போது பொய்யானது என அறிவிக்கப்பட்டுள்ளது என உறுதிப்படுத்தப்படல் என்ற விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு மதிப்பீட்டாளர் ஒருவினால் செய்யப்படும் மதிப்பீடு மற்றும்/அல்லது அபிப்பிராய அறிவித்தல் ஊடாக அறவிடப்படும் வருமானம் சேகரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில்,

அவ்வாறு சேகரிக்கப்படும் வருமானத்தில் பன்னிரெண்டு தசம் ஐந்தும்.

*10- 307*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.